

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் தெ. கௌதம் சிகாமணி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, கழக செய்தி / தொடர்பு தலைவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், கவிஞர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி தான் எழுதி வெளியிட்ட “கலைஞர் காவியம்” நூலினை வழங்கினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.

### இலக்கியத் துறையில் சிறப்பாகத் தொண்டாற்றி வரும்

# ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு ஔவையார் விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.6.2024) தலைமைச் செயலகத்தில், இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும் ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவுக்கு 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், மகளிர் உரிமை, மத நல்லிணக்கத்தை ஊக்குவித்தல், தமிழுக்கான சேவை, கலை, இலக்கியம், அறிவியல், பத்திரிகை மற்றும் நிருவாகம் ஆகிய பல்வேறு துறைகளில் முன்மாதிரியாக தொண்டாற்றிய பெண்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச மகளிர் தினத்தன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தமிழ்நாடு அரசால் “ஔவையார் விருது” வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது பெறுவோருக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

அவ்வகையில், தமிழ்நாடு அரசின் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதிற்கு இலக்கியத்தின் மூலமாக தலித் மக்களின் குரலாக ஒலித்து, சமூக தொண்டாற்றி வரும். முன்னணி எழுத்தாளரான விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பெண்களின் வாழ்க்கையை, குறிப்பாக ஒடுக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கையை தனது வாழ்வனுபவங்களின் மூலம், சாதி மற்றும் பாலினம் சார்ந்து சமூகத்தில் நிலவும் சமத்துவமின்மையையும் அநீதிகளையும் எடுத்துக்காட்டும் பல்வேறு நூல்களை ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமா எழுதியுள்ளார். இவற்றில் கருக்கு, சங்கதி, வன்மம், மனுசி போன்ற நாவல்களும், குசும்புக்காரன், கொண்டாட்டம், ஒரு தாத்தாவும் எருமையும் போன்ற சிறுகதை தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.

இவர் எழுதிய “கருக்கு” என்ற புதினம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, 2000 ஆம் ஆண்டின் ‘கிராஸ் வேர்ட்புக்’ விருதை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், அவர் எழுதிய “கருக்கு” என்ற புதினம் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும், “வன்மம்” என்ற புதினம் ஆங்கிலம், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளிலும், “சங்கதி” என்ற புதினம் பிரஞ்சு, ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும், “குசும்புக்காரன்”, “ஒரு தாத்தாவும் எருமையும்” போன்ற சிறுகதை தொகுப்புகளிலிருந்து சில கதைகள் ஆங்கிலம், ஹிந்தி, உருது, கன்னடம், குஜராத்தி ஆகிய மொழிகளிலும், மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஃபாஸ்டினா சூசைராஜ் (எ) பாமாவின் இலக்கியப் பணியினை பாராட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் 2024ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை அவருக்கு வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர்சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நல ஆணையர் திருமதி வே. அமுதவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புதுச்சேரி ரெட்டியார்பாளையத்தில்

# விஷவாயு தாக்கி மூன்று பேர் உயிரிழப்பு!

## இழப்பீடு வழங்க எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தல் !

புதுச்சேரி, ஜூன் 13-

புதுச்சேரி ரெட்டியார் பாளையம் புதுநகர் பகுதியில் பாதாள சாக்கடையில் இருந்து விஷவாயு அப்பகுதியில் இருந்த வீடுகளில் உள்ள கழிவறை வாயிலாக வெளியேறிய நிலையில் கழிவறைகளை பயன்படுத்திய ஐந்து பேர் விஷவாயு தாக்கப்பட்டு புதுச்சேரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர், அதில் 15 வயது சிறுமி செல்வராணி, 75 வயது மூதாட்டி செந்தாமரை, செந்தாமரையின் மகள் காமாட்சி ஆகிய மூன்று பேர் உயிரிழந்த நிலையில், ராஜேஷ்கண்ணன் மற்றும் பாக்கியலட்சுமி ஆகிய இருவர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

இதனிடையே விஷவாயு வெளியேறிய புதுநகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களை ஒலி பெருக்கி மூலம் அறிவுறுத்தி அப்பகுதியில் இருந்து வெளியேற்றினர், தொடர்ந்து உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் ஊழியர்கள் பாதாள சாக்கடை அடைப்புகளை சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவலறிந்த சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, மக்களவை உறுப்பினர் வைத்திலிங்கம் ஆகியோர் சம்பவஇடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் போதிய பராமரிப்பு இல்லை. புதுநகர் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தில் நச்சுக்கழிவு வாயு வெளியேறுவதற்கு தனியாக பைப் லைன் அமைக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அப்படி அமைக்கப்பட்ட பைப்-லைன்கள் பல இடங்களில் கசிவு ஏற்படுவதாக மக்கள் புகார் கூறுகின்றனர். அதை அதிகாரிகள் குழு தொடர்ந்து கண்காணித்து இருக்க வேண்டும். தவறிவிட்டதன் விளைவு இன்று மூன்று விலைமதிக்க முடியாத உயிர்களை நாம் இழந்துள்ளோம். புதுச்சேரி முழுவதும் பாதாள சாக்கடை திட்டம் தோல்வி அடைந்துள்ளது. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் முதலில் பாதாள சாக்கடை திட்டத்தை மேம்படுத்தப்போவதாக அரசு தெரிவித்தது. ஆனாலும், 50 ஆண்டுகள் கடந்த நிலையில் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் பாதாள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. ஆகவே அரசு இதை முக்கிய பிரச்சினையாக கருதி, தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்தை மேனிக்காக்க வேண்டும். அரசு துறையை முடிக்கிவிட வேண்டும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் முறையாக பம்பிக் செய்ய வேண்டும். இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு ஆறுதல் மட்டும் தெரிவிக்காமல் இறந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

இந்த ஆய்வின்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், எல்.சம்பத், தொகுதி செயலாளர் கலியகார்த்திகேயன் ஆகியோர் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.6.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் புதிய அறிவிப்புகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, காவல்துறை தலைவர் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சாமுண்டீஸ்வரி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் உமா மகேஸ்வரி, தாட்கோ பொது மேலாளர் (நிர்வாகம்) ப.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் முப்பெரும் விழா!

# தஞ்சை மத்திய மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டச் செயலாளர் - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



தஞ்சாவூர். ஜூன்14-

ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டுமென மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு : - வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற் றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், அக்கூட்டத்தில் தஞ்சை மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், ஒன்றிய, பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழு நிலைக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழக செயல்வீரர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.,அறிவிப்பு!

திருவள்ளூர், ஜூன் 13-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் இன்று (13.06.2024 - வியாழக்கிழமை) காலை 11.00 மணியளவில் திருவள்ளூர் நகரம் ஐ.வி.ஆர். திருமண மண்டபம் ஆயில் மில் அருகில் மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினரும், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக் கூட்டத்தில் ஜூன் 15ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் கோவையில் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என “முப்பெரும் விழா” கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் பெருந்திரளாய் கலந்து கொள்வது குறித்து ஏற்பாடு செய்யும் விதத்தில் கூட்டம் நடைபெறுகிறது.

அதுசமயம் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர். இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் வி.சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, பா. உதய மலர் பாண்டியன், எம். மிதுன் சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.இராஜே ஸ்வரி இரவீந்திரநாத், ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர். மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. ஜூன் 15ஆம் தேதி கோவையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திரளாய் கலந்து கொள்வது குறித்து. 2. கழக வளர்ச்சி பணி.

இவ்வாறு திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேரூர் ஆ. நடராஜன்

ஜூன் 13 (2017)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.

கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

“தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்” என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.